# வீசுக புயலே!

(கவிதைத் தொகுப்பு)

லறீனா.ஏ. ஹக்

வர்தா பதிப்பகம்



# வீசுக புயலே!

(கவிதைத் தொகுதி)

லறீனா.ஏ. ஹக் பி.ஏ. (சிறப்பு)
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

வர்தா பதிப்பகம்
85C, பிட்டுனுகம,
முறுதகஹமுல - 20526

தலைப்பு : வீசுக புயலே!
(கவிதைத் தொகுதி)

ஆசிரியை : லறீனா.ஏ. ஹக்

பதிப்புரிமை : ஆசிரியை

முதல் பதிப்பு : மே, 2003

வெளியீடு : வர்தா பதிப்பகம்,
85C, பிட்டுனுகம,
முறுதகஹமுல.

***ISBN*** : 955-98241-0-4

***TITLE*** : *VEESUHA PUYALE*
*(COLLECTION OF POEMS)*

***AUTHOR*** : *LAREENA. A. HAQ*

***COPY RIGHT*** : *AUTHOR*

***FIRST EDITION***: *MAY, 2003*

***TYPESETTING*** : *M. F. M. RIYAZ*
*177/2, BOOWELIKADA,*
*HANDESSA, GELIOYA.*
*TEL: 08-315244*

***PUBLISHERS*** : *VARDHA PUBLICATIONS*
*85C, PITUNUGAMA,*
*MURUTHAGAHAMULA.*
*vardhapub@yahoo.com*

***PRIZE*** : *80/=*

# சமர்ப்பணம்

-

அந்நியரின் அராஜகத்தால்
மண்ணிழந்து வாழ்விழந்து
இன்னலுற்ற போதினிலும்
தன்மானம் காப்பதற்காய்
இன்னுயிரை அர்ப்பணிக்கும்
பலஸ்தீன மக்களுக்கு!

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

## என்னுரை

சுமார் பன்னிரண்டு வயதிலிருந்து கவிதை எழுத ஆரம்பித்தபோதிலும், 1992 இல்தான் என்முதல் கவிதையான, 'ஓ...பஸ்ஸே!' வீரகேசரி வாரமஞ்சரியில் பிரசுரமானது. இன்னும் அதிகமாக எழுதவேண்டுமென்ற ஆர்வம் அதன் பின்னரேயே என்னுள் கிளர்ந்தது எனலாம்.

க.பொ.த. உயர்தரத்தில் பயிலும்போது, சிறுகதையும் நாவலுமே என் கவன ஈர்ப்புக்குட்பட்டதால், அக்கால கட்டத்தில் கவிதை எழுதுவது சற்றுத்தடைப்பட்டதென்னவோ உண்மைதான். எனினும், பத்தனையூர் வே.தினகரன், மாத்தளைக் கமால், ஆசிரியர். இரா. சிவலிங்கம் மற்றும் பாடசாலை நண்பிகள் எனப் பலர்தந்த உற்சாகம், இத்துறையில் ஆழமான ஈடுபாடு கொள்ளத் தூண்டுதலளித்தது. அவர்களுள், நானெழுதும் ஒவ்வொரு கவிதையையும், 'இது நன்றாக இருக்கிறது', 'இதனை இப்படி எழுதியிருக்கலாமே!' என்றெல்லாம் வரிக்கு வரி காத்திரமாக விமர்சித்து எனக்கெழுதும் இலக்கிய நண்பரான பத்தனையூர் தினகரன் அண்ணா மிகக் குறிப்பிடத்தக்கவர்.

என் கவிப்பயணத்தின் வசந்த காலமாய் அமைந்தது; என் வளாக வாழ்வுதான். அங்கேதான் என் நெஞ்சகத்தெழுந்த கவிதை மகவுக்குத் தமிழ்த் துறையின் சங்கப்பலகை தொட்டிலானது. சமயம் வாய்க்கும் போதெல்லாம் கவிதை எழுதுமாறும் தொகுதியாக வெளியிடுமாறும் ஊக்குவித்துக் கொண்டேயிருக்கும் என் அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய ஆசான், கலாநிதி

துரை. மனோகரன் அவர்களுக்கு நான் என்றுமே கடமைப்பட்டுள்ளேன். மிகுந்த வேலைப் பளுவுக் கிடையிலும் இத்தொகுதிக்காக ஒரு முன்னுரையை எழுதித் தந்த அவரது பெருந்தன்மை மறக்கப்பட முடியாதது.

இதுவரை ஐம்பதுக்கும் அதிகமான கவிதைகளை எழுதியுள்ள போதிலும், அவற்றுள் சுமார் 22 கவிதைகளே இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. மொழிபெயர்ப்புக் கவிதைகளை மற்றுமொரு தனித்தொகுதியாக விரைவில் வெளியிட எண்ணியுள்ளேன் (இன்ஷா அல்லாஹ்).

போரினாலும் இனவன்முறையினாலும் உழைப்புச் சுரண்டல்களாலும் ஆணாதிக்கச் செயற்பாடுகளாலும் பாதிப்புக்குள்ளான ஜீவன்களின் மனக்குமுறல்கள் இத்தொகுதியில் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அடக்குமுறைகளுக்கு உட்பட்டு அழுங்கிக் கொண்டிருக்கும் எந்தவோர் இனக்குழுமமும், மக்கள் தொகுதியும் என்றாவது ஒருநாள் பொங்கியெழவே செய்யும் என்பதை வரலாறுநெடுகிலும் நாம் கண்டுவந்துள்ளோம் மானிட சமூகத்தில் உயர் விழுமியங்களின் வேர்கள் இற்று, மண்ணோடு மண்ணாகிப்போய் அநீதியும், அக்கிரமங்களும், அடக்கு முறைகளும் விஷ விருட்சங்களாய் ஊன்றி வளர்ந்து கிளை விரித்தாடும் வேளையில், சாத்வீக வழிமுறைகள் சாத்தியமற்றுப் போனால், அதர்மத்தை அழிப்பதற்கான ஆன்மாவின் உணர்வுகள் புயலாகச் சீறியெழுவது காலத்தின் தேவையாகிறது. கொலைகாரர்களும் கல்நெஞ்சக்காரர்களும்

சமாதானக் காவலராய் நோபல் பரிசு கொடுக்கப்பட்டும், உலக சமாதானத்தை முன்னிறுத்தும்(!) 'நாட்டாண்மைக்காரர்' ஆக்கப்பட்டும் இருக்கும் வேடிக்கை உலகின் அவலம் கண்டுதான் இந்தப் 'புயல் வீசி' யிருக்கிறது.

என்கவிதைகளுக்குக் களம் தந்த மித்திரன் வாரமலர், ஜனனி, தினகரன், வீரகேசரி என்பவற்றுக்கும் அல்-ஹஸனாத், இளங்கதிர், ஞானம், பெண்ணின் குரல் போன்ற இதழ்களுக்கும் என் நன்றிகள். என் கவிதைகள் ஒரு தொகுதியாக வரவேண்டும் என்பதில் அக்கறை கொண்ட பண்ணாமத்துக் கவிராயர், கவிஞர்.ஏ. இக்பால், வே. தினகரன், ஸ்ரீ பிரசாந்தன், மௌ.சித்தார்த்தன், சோமகாந்தன் தம்பதி மற்றும் ஷர்மிளா ஏ.ஆர், ச.ஜெகநாதன்,ச.மஸாஹிமா போன்றோருக்கு என் அன்பு.

மேலும், இத்தொகுதி வெளிவருவதில் முன்னின்று உழைத்த என் அன்புத்தம்பி ஸியா-உல்-ஹக், கணினி வடிவமைப்பில் உதவிய சகோதரர்கள் எம். எப். எம். இர்பான், எம். எப். எம். ரியாஸ் மற்றும் எம். எச். எம். அமீன் இஸ்ஸத் ஆகியோருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கவிதைத் துறையில் என் கன்னிப் படைப்பான இத்தொகுதிக்கு வாசகர்களாகிய உங்கள் ஆதரவு கிடைக்குமென்ற நம்பிக்கையில் விடைபெறுகிறேன்.

லறீனா. ஏ. ஹக்

தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.
20.04.2003

# முன்னுரை

ஈழத்துத் தமிழ்க் கவிதைத் துறையில் பெண் கவிஞர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாக விளங்குகிறது. எண்பதுகளுக்குப் பின் ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதைகளில் சமூக விமர்சனமும், பெண்ணிய நோக்கும், ஆழமான மன உணர்வு வெளிப்பாடுகளும், கவிதா ஆற்றலும் தென்படுகின்றன. ஊர்வசி, ஔவை, மைத்ரேயி, சிவரமணி, சன்மார்க்கா, அ. சங்கரி, மதுரா ஏ. மஜீட், சுல்பிகா, கலா உட்படப் பலரின் கவிதைகளில் புதுமை நோக்கும், தர்மாவேசமும், புதிய வீச்சும் இடம்பெறுகின்றன. இந்த வரிசையில் புதிதாகச் சேரக்கூடிய பக்குவத்தையும், பலத்தையும் கொண்டவராக எனது மாணவியும், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை விரிவுரையாளருமான லறீனா அப்துல் ஹக்கும் இடம்பெறுவார் என்பதை, 'வீசுக புயலே!' என்ற இக்கவிதைத் தொகுதி உணர்த்துகிறது. எழுத்து, பேச்சு, நடிப்பு, இசை, ஓவியம் ஆகிய துறைகளில் தமது ஆற்றலை வளர்த்து வந்துள்ள லறீனா, இத்தொகுதி மூலம் தரமான ஒரு கவிஞராகத் தம்மை இனங்காட்டிக் கொள்கின்றார்.

இத்தொகுதியில் கவிஞரின் பலதரப்பட்ட கவிதைகள் இடம்பெற்றுள்ளன. கவிஞரின் சமாதான ஆவல், மனித நேயம் மீதான ஈடுபாடு, மலையகத் தொழிலாளர் தொடர்பான ஆதங்கம், பாலஸ்தீனம் பற்றிய பரிவுணர்வு,

பெண்ணிய நோக்கு, அகவுணர்வுகளின் வெளிப்பாடு முதலிய அம்சங்கள் இக்கவிதைகளில் இழையோடுகின்றன. நவீன கவிதைகளும், புதுக்கவிதைகளும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

இன்றைய இலங்கையின் அவசியத் தேவை சமாதானமே. இதன் சுவையை அறிந்தோர், அதன் பெருமையை ஆராதிப்போர், அதன் பெறுமதியை உணர்ந்தோர் சமாதானத்தை வரவேற்கவே செய்வர். அதே வேளை, சமாதானம் வேண்டாம் என்று கூச்சல் போடவும், சமாதானத்தை எதிர்க்கவும் ஒரு கூட்டம் இந்த நாட்டில் இருக்கவே செய்கிறது. சமாதானத்தை வெறுப்பவர்கள் ஒன்றில் மனிதத் தன்மை இல்லாதவர்களாக இருப்பர்; அல்லது மனக்கோளாறு கொண்டவர்களாக இருப்பர். இலங்கையில் கடந்த ஒரு வருடகாலமாகச் சமாதானத்தின் சக்தியை ஓரளவாயினும் உணரமுடிந்திருக்கிறது. லறீனாவின் 'ஓ வெண்புறாவே!' என்ற கவிதை 1998இல் எழுதப்பட்டது. இன்னும் அந்தக் கவிதைக்கு ஒரு தேவை இருக்கத்தான் செய்கிறது. 'நாளையேனும்' என்ற கவிதையும் சமாதானத்தை அவாவுகின்ற கவிஞரின் ஆவலைப் புலப்படுத்துவதாக விளங்குகிறது. நாளையேனும் இந்நாட்டில் நல்லது நடக்க வேண்டும் என்ற மக்களின் பொதுவான எதிர்பார்ப்பினைக் கவிதை வடிவில் லறீனா தந்துள்ளார்.

இந்நாட்டின் கோர யுத்தம் அகதிமுகாம்களை அதிகம் ஏற்படுத்தியிருக்கிறது; அவலங்களை மனித

வாழ்வின் அடிப்படைகளாக ஆக்கியிருக்கிறது. உற்றார் உறவினரைப் பிரிந்துவாழும் துர்ப்பாக்கிய நிலையையும் மக்களிடம் உருவாக்கியிருக்கிறது. இத்தொகுதியில் இடம்பெறும், 'அன்னைக்கொரு மடல்' என்ற கவிதையும் இத்தகைய பின்னணியைக் கொண்டதாகவே அமைந்துள்ளது. அகதிமுகாமில் வாழும் அன்னைக்கு மகள் எழுதும் மடலாக அக்கவிதை அமைந்துள்ளது. கவிதையின் இறுதிவரிகளிலே நாட்டின் எதிர்காலம் பற்றிய கவிஞரின் நம்பிக்கையுணர்வு வெளிப்படுகின்றது:

"எனவே...
இந்த மில்லேனியத்தில்
எமக்கும் விடியலுண்டு
நம்பிக்கை இழக்காதே!
அந்த நன்னாளில்
சோதனைச் சாவடிகள்
விலாசம் தொலைத்திருக்கும்!
அடையாள அட்டையின்றி
எங்கும் உலாவலாம்!
அகதி முகாம்விட்டு
இல்லம் திரும்பலாம்!
உரிய நேரத்திலுன்மடல்
எனக்கு எட்டும்!
மனிதரென்ற அங்கீகாரம்
எங்களுக்கும் கிடைக்கும்!"

இவ்வாறு கவிதை முடிகிறது. இவ்வாறான ஒரு நிலை நாட்டில் ஏற்பட வேண்டும் என்பதே நாட்டுப்பற்றுள்ள அனைவரதும் பிரார்த்தனையாகும்.

நாட்டின் போரும், வாழ்வின் வறுமை நிலையும் எண்ணற்ற பேர்களை இராணுவத்தில் சேர்த்திருக்கிறது. தேவையற்ற யுத்தத்தை நடத்திக்கொண்டு 'சமாதானத்துக்கான யுத்தம்' என்று சில அரசியல்வாதிகள் வேடிக்கை வினோதம் காட்டியதும் உண்டு. ஆனால், உலகத்தின் எந்த இராணுவமும் சமாதானத்தை விதைத்ததாகச் சரித்திரமே இல்லை.போர் அழிவுகளையும் மனித மனங்களின் வெறுப்புக்களையுமே தனது ஆயுதங்களோடு அது சுமந்து கொண்டிருக்கிறது. விரும்பியும், விரும்பாமலும் பல இளைஞர்கள் இராணுவத்தில் சேர்கிறார்கள். லறீனாவின் 'என் ஆன்மா பூக்களை நேசித்துக் கொண்டிருக்கிறது' என்ற கவிதையில் ஓர் இராணுவ வீரனின் உள்ளத்தினுள்ளே புதைந்திருக்கும் ஆத்மார்த்த ஆசை புலப்படுத்தப்படுகிறது. பூக்களை நேசிக்கும் இயல்புடைய மென்மையான இதயம் கொண்ட அவன், ஓர் ஓவியனாக வரவிரும்பியிருந்தான். ஆனால், அவனது குடும்பச் சூழல் அவனை ஓர் இராணுவ வீரன் ஆக்கிவிடுகின்றது. போர்க்கருவி அவனுக்குச் சுமையாகத் தெரிகிறது. உள்ளத்துக்குள் அவனது ஆத்மா அழுதுகொண்டேயிருக்கிறது. அவன் தனது ஒரேயோர் ஆசையை நிறைவேற்றுமாறு வேண்டிக்கொள்கிறான். அவனின் அந்த ஆசையைக் கவிஞர் பின்வருமாறு கவிதையில் வடித்திருக்கிறார்:

"சீருடைக்குள் சிறையிருக்கும்
எனக்குள் இன்னொருவன்
இருப்பதை யாரறிவார்?
தூரிகை பிடிக்குமோர்
ஓவியனாவதற்கு - நான்
கண்டிருந்த கனவும் ஒரு
முகில் ஓவியமானதின்று!
என்றாலும்... நான்
என்றேனும் இறந்து போனால்...
என் கல்லறை மருங்கில்
ஒரே ஒரு
பூச்செடி நட்டிடுங்கள்!
ஏனெனில்
நானுயிர் நீத்தாலும்
என் ஆத்மா
பூக்களை
நேசித்துக் கொண்டிருக்கும்.!"

கவிதை இவ்வாறு முடிவு பெறுகிறது. கவிதை முடிவுபெற்றாலும், அந்த இராணுவ வீரனின் நெஞ்சச் சுமையும், அழகியல் உணர்வும் எம்மையும் பாதிக்கிறது.

மனித நேயம் என்பது கலை-இலக்கியவாதிகளிடம் இயல்பாக இருக்க வேண்டிய ஒன்று. மனித நேயம் இல்லாதவர்கள் அரசியல்வாதிகளாக வருவதுண்டு. ஆனால், உண்மையான கலை-இலக்கியவாதிகளாக வரமுடியாது. 'எரிந்துபோன மனிதநேயம்' என்ற கவிதையின் வாயிலாக லறீனாவின் இதயத்திற் பொங்கித் ததும்பும் மனித நேயத்தைப் புரிந்துகொள்ளலாம். பிந்துனுவெவக் கிராமத்தில் நடந்த மனிதநேயம் மறந்த செயல்களைக் கவிஞர் விமர்சிக்கிறார்.

கவிஞரின் தர்மாவேசம் இக்கவிதையிற் கொப்பளிக்கிறது.

"இளைத்துவிட்ட
எறும்பென்றெண்ணி
ஈங்கு
இழைக்குமிந்த அநீதிக்கெல்லாம்
கிடைக்கும் நாளை
நல்ல தீர்ப்பு,
தருமத்தின் இறுதித்தீர்ப்பு!
அதன்பின்...
அடங்கியழிந்து போகுமிந்த
அதருமத்தின் ஆர்ப்பரிப்பு!"

என்று அந்தக் கவிதை முடிவுபெறுகிறது. முடிவுபெற்ற பின்னரும் மனத்தில் தாக்கத்தை அக்கவிதை ஏற்படுத்துகிறது.

நமது நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் பல்வேறு முன்னேற்றங்கள் பலவழிகளில் ஏற்பட்டு வந்துள்ள போதிலும், மலையகப் பிரதேசம் முழுமையான மாற்றத்துக்கு இன்னமும் உட்படவில்லை. அதே கவ்வாத்துக் கத்தியும், அதே கூடையுமாய், அதே அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட வாழ்வினையே மலையகத் தொழிலாளர்கள் அனுபவித்து வருகின்றனர். அவர்களின் இந்தநிலை கவிஞரிடத்து ஏற்படுத்திய பாதிப்பினை 'ஒரு துளிக் கண்ணீர்' என்ற கவிதை உணர்த்துகிறது.

"உயர்ந்த மலைமேல்
உறைவிடமிருந்தும்
உரிமையும் உயர்வும்
தூரத்துக் கானலாய்...

புத்தகம் சுமக்கும்
பள்ளிப் பருவத்தில்
கவ்வாத்துக் கத்தியும்
கூடையும் சுமையாய்...

எட்டடி லயனில்
எங்கள் ராச்சியம்!
'இலக்ஷ'னின் போதுமட்டும்
இருப்போம் ராசாக்களாய்!'

என்பன போன்ற வரிகளில் மலையகத் தொழிலாளரின் வாழ்வியலைக் கவிஞர் இனங்காட்டுகின்றார். கவிதையின் இறுதியிலே,

'எமக்கென உளமுருகி
ஒருதுளிக் கண்ணீரை
வடிப்பது விடியலின்
பனித்துளி யொன்றே!'

என்று கவிஞர் அந்தப் பாவப்பட்ட மக்களுக்கான தமது இரங்கல் உணர்வை வெளிப்படுத்துகின்றார்.

பாலஸ்தீன மக்களின் போராட்டம் இன்றும் ஒரு நெடுந்தூரப் பயணமாகவே விளங்குகிறது. தர்மத்தின் கண்களுக்குப் பாலஸ்தீனர்களின் போராட்டம் நியாயமானதாகவே தென்படும். பாலஸ்தீன மண்ணில் இஸ்ரேலியர்கள் செய்துவரும் அநியாயங்களையும் அட்டூழியங்களையும், அடாவடித்தனங்களையும் பல கவிஞர்கள்

தர்மாவேசத்துடன் பாடியுள்ளனர். லறீனாவும் 'வீசுக புயலே!', 'இஸ்ரேலியனே!', 'காற்றின் குரல்' என்ற கவிதைகள் வாயிலாகப் பாலஸ்தீனப் போராட்டத்துக்குத் தமது ஆதரவையும் இஸ்ரேலியர்களுக்குத் தமது எச்சரிக்கையையும் தெரிவித்துள்ளார். 'வீசுக புயலே!' என்ற கவிதை பாலஸ்தீன மண்ணில் இஸ்ரேலியர்கள் இழைத்துவரும் கொடூரங்களை இனங்காட்டி, தமது மண்மீதான பாலஸ்தீனர் ஒருவரின் பற்றையும் தீமைகளுக்கு எதிராகக் கனன்று எழும் அவரது போராட்டவுணர்வையும் புலப்படுத்துகின்றது. 'வீசுக புயலே!' என்ற தலைப்பே கவிதையைப் படிக்கத் தூண்டும் முறையில் அமைந்துள்ளது. லறீனா தமது கவிதைத் தொகுதிக்கும் இத்தலைப்பையே தேர்ந்தெடுத்தமை வரவேற்புக்குரியது. இத்தொகுதியின் பொதுவான தொனியையும் 'வீசுக புயலே' என்ற நூலின் பெயர் உணர்த்துகின்றது.

'இஸ்ரேலியனே!' என்ற கவிதை பாலஸ்தீன மக்களின் நியாயமான உரிமைகளையும், உணர்வுகளையும் மதிக்காத இஸ்ரேலின் போக்கைக் கடும் ஆவேசத்துடன் கண்டிப்பதாக அமைந்துள்ளது.

"புல்லென்று நினைத்தனையோ,
'பூட்ஸ்' காலால் நீ மிதிக்க?
கல்லென்று கருதினையோ,
காலமெல்லாம் நிலங்கிடக்க?
பொல்லாத சூழ்ச்சியினால்
புனித பூமி அபகரித்த
புல்லியனே உனக்கெதற்குப்
புறாக்களின் சின்னமினி?"

என்று இக்கவிதை தொடர்ந்து செல்கிறது.

ஈழத்துப் பெண் கவிஞர்களிடத்துப் பெண்ணிய நோக்கு ஆழம் பெற்றும் விசாலமடைந்தும் வருகிறது. கவிஞர் லறீனாவிடத்தும் இந்நோக்கு குறிப்பிடத்தக்க முறையில் இடம்பெற்றுள்ளது என்பதை இத்தொகுதியில் உள்ள சில கவிதைகள் தெளிவான முறையில் இனங்காட்டுகின்றன. 'நான் பெண்', 'வர்ணனைகளுக்கு அப்பால்...' 'வழக்குரை மன்றம்' ஆகிய கவிதைகள் லறீனாவின் பெண்ணிய நோக்கைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன.

'நான் பெண்
என் சின்னஞ்சிறு உலகம்
எப்போதும் இருட்டுக்குள்!

என் இரவுகள்
நிலவோடு நட்சத்திரங்களை
தொலைத்துவிட்டன;
எனது பகல்கள்
ஆதவனையும் தென்றலையும்
இழந்துவிட்டன'

என்று 'நான் பெண்' என்ற கவிதை தொடங்குகின்றது. இலங்கையில் இடம்பெற்றுவந்துள்ள இராணுவ அட்டூழியங்கள் பல படைப்பாளராற் பதிவு செய்யப்பட்டுள்ளன. லறீனாவும் தமது கவிதையில் தமது பாணியில் பெண்களின் துயரநிலையை உணர்ச்சிகரமாகப் பதிவு செய்துள்ளார். 'வர்ணனைகளுக்கு அப்பால்...'

என்ற கவிதை பெண்ணுணர்வை அழகாகவும், உணர்வாழத்துடனும் தரும் அருமையான கவிதை. பெண்ணிய நோக்கில் குறிப்பிடத்தக்க கவிதையாக அது விளங்குகிறது.

லறீனாவின் படைப்பாற்றலைச் சிறப்பாக இனங்காட்டும் படைப்பு, 'வழக்குரை மன்றம்' என்ற கவிதை ஆகும். கணவனை இழந்து நீதி கேட்கும் கண்ணகியையும், 'காவலர்களால்' பாதிக்கப்பட்ட பெண்ணொருத்தியையும் மாறி மாறித் திரைப்படக் காட்சிகள் போலக் காட்டி, கண்ணகியால் நீதிகேட்க முடிந்தது. ஆனால், இன்றைய காலத்துப் பெண்ணுக்கு நீதி கிடைப்பதில்லை என்ற ஏக்கப் பெருமூச்சைக் கவிதை வாயிலாகக் கவிஞர் புலப்படுத்துகின்றார்.

"கண்ணகி கொங்கையைக்
கழற்றி யெறிந்தாள்
பற்றி யெரிந்தது மதுரை!

வழக்குரை மன்றில் வனிதை
வார்த்தையால் மறுபடி
வல்லுறவு நடந்தது
ஆனால்... அன்றுபோல்
எரிப்பதற்கிங்கென்ன
எஞ்சியிருக்கிறது,
ஏலவே 'எல்லாமே'
கருகிவிட்ட நாட்டில்?"

என்று கவிதை முடிகிறது. ஆயினும், கவிதையைப் படித்து முடித்த பின்னர், வாசகர் மனத்தில் சிந்தனை கனதி பெறத் தொடங்குகின்றது.

இத்தொகுதியிலுள்ள 'புரிதல்', 'பிரிந்து செல்லுகை' முதலிய கவிதைகள் அகவுணர்வுகளை அழகியல் ரீதியில் தருகின்றன. விடியல் வருவதெப்போ? துப்பாக்கி கீதம், மாற்றம், சுதந்திரப் பொன்விழா, முன்னேற்றம் முதலிய கவிதைகளும் குறிப்பிடத்தக்கனவாக விளங்குகின்றன.

இக்கவிதைத் தொகுதி வளரும் இளங்கவிஞர் ஒருவரின் ஆற்றலை வெளியுலகுக்குத் தெரிவிக்கும் முறையில் அமைந்துள்ளது. லறீனா அப்துல்ஹக் இத்தொகுதி மூலம் பேசப்படும் ஒரு கவிஞராகத் திகழ்வார் என்பது என் கருத்து. அவரது கவிதைகள் தொடர்ந்து வெளிவர வேண்டும்; கவிதைத்தொகுதிகளும் பிரசுரமாக வேண்டும். தென்றலாக அன்றி, புயல் போல எழுச்சி பெற்று வருகின்ற இளங்கவிஞர் லறீனாவை இலக்கியவுலகில் வாழ்த்தி வரவேற்பதில் மகிழ்ச்சி பெறுகிறேன்.

கலாநிதி துரை. மனோகரன்

தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை, இலங்கை.
07.04.2003

# உள்ளே...

- நாளையேனும்...
- பேராதனை வளாகம்
- எரிந்துபோன மனிதநேயம்...
- ஓ! தந்தையே...
- ஓ! வெண்புறாவே...
- என் ஆத்மா பூக்களை நேசித்துக்...
- நாமும் சமூகமும்
- பிரிந்து செல்லுகை
- அட அப்படியா?
- ஒரு துளிக்கண்ணீர்
- இஸ்ரேலியனே!
- அன்னைக்கொரு மடல்
- மாற்றம்
- புரிதல்
- வர்ணனைகளுக்கப்பால்...
- காற்றின் குரல்
- விடியல் வருவதெப்போ?
- துப்பாக்கி கீதம்
- சுதந்திரப் பொன்விழா
- முன்னேற்றம்(!)
- நான் பெண்
- வழக்குரை மன்றம்
- வீசுக புயலே!



## நாளையேனும்...

உத்தரத்து உச்சியிலே
ஊசலாடும் ஒரு கயிறாய்
புத்தியற்ற செய்கையாலே
போனதின்று மனிதவாழ்வு

கத்தியின்றி ரத்தமின்றி
காரியங்கள் செய்தகாலம்
சித்திரமாய்ச் சிந்தையிலே
சிதிலமாகிப் போனதையோ!

சத்தியத்தைக் காப்பதிலே
சமாதானம் பிறப்பதிலே
சித்தமென்றும் இருக்குதென்று
சீராகப் பேசுவார்கள்!

நித்தமின்று மனு உரிமை
நீர்க்குமிழியாதல் கண்டும்
சத்தமின்றித் தங்கருமம்
செய்வதிலே முனைந்திடுவர்!

பத்திரிகை புரட்டுகையில்
பத்திபத்தியாய்த் தணிக்கை!
புத்தியிலே படுகுதில்லை
பொதிந்திருப்ப தென்னவென்று!

## 20. வீசுக புயலே!

சுற்றியுள்ள உலகினிலே
 சேதியொன்று மறியாமல்
கிணற்றுக்குள் நுணலெனவே
 கிடப்பதுதான் சுதந்திரமோ?

சாத்வீக வழிமுறைகள்
 செல்லரித்துப் போதல் கண்டீர்!
சுவாசித்தலும் இனியெமக்கு
 சாத்தியமோ தணிக்கைதானோ?

யுத்தமென்ற பெயரினிலே
 யுகமெல்லாம் விளைக்குந்தீமை
எத்தினத்தில் ஓயுமென்று
 இதயமெங்கும் ஏக்கந்தேங்கும்!


மனித்தருக்கு மானம்போல
 மனிதவுரிமை யும்வேண்டும்
பத்திரிகைத் தணிக்கையெல்லாம்
 பொய்யாகிப் போகவேண்டும்!

நித்தமெங்கள் நெஞ்சங்களில்
 நெருப்பெரியும் அவலம்நீங்கி
நத்தைபோல ஒடுங்கிவாழும்
 நாட்கள் இனிமாறவேண்டும்!

சரித்திரத்தில் கற்றபாடம்
 சமாதானம் மலரச்செய்து
சரிந்திட்ட மனிதவிழுமம்
 செம்மையுற்று மிளிரவேண்டும்!

சத்திரத்து வாழ்க்கைபோல
 சீரழிந்து போனவாழ்வு
பவித்திரமாய் நாளையேனும்
 பார்போற்ற உயரவேண்டும்!

ஞானம்: ஆகஸ்ட் 2000



## பேராதனை வளாகம்


விண்ணெட்டும் வரையுயர்ந்த
வரைகள்தாம் சூழ்ந்திருக்க...
கண்ணெட்டும் வரைபசுமை
காண்போரைக் கவர்ந்திழுக்க...
வெண்பட்டு முகிலினங்கள்
வண்ணமுறக் குடைபிடிக்க...
எண்ணற்ற கவிதைவந்து
என்மனதில் குவிகிறதே!


தென்றலினைச் சலவைசெயும்
தாவரங்கள் பற்பலவாம்!
கொன்றையென்றும் அல்லியென்றும்
கதம்பமலர் அற்புதமாம்!
என்றிவற்றை எழுதப்புக்கால்
எத்தனைதான் நானெழுத?
நன்றறியேன் சிறியள்யான்
நேரும்பிழை பொறுத்தருள்வீர்!

அடர்மரத்தின் கிளைகளிலே
அழகுறவே இடையிடையே
படருகின்ற கொடிகளெம்மை
பூவுதிர்த்து வாழ்த்துமம்மா- புதுத்
தடம்பதித்து மருங்கினிலே
தாயவளாய் மாவலியாள்
நடைபயிலும் அழகுரைக்க
நா(வு)நூறு வேண்டுமம்மா!

கம்பீரத் தோற்றமுடன்
கட்டடங்கள் ஓங்கிநிற்க
எம்பியெம்பிப் பார்த்திடுவான்
இரவியுமே வியந்திடுவான்!- தன்
னம்பிக்கைச் சுடர்பரப்பும்
நற்கல்வி நலம்பயக்கும்
நம்வளாக வாழ்வெமக்கு
நாளெல்லாம் இனிமை தரும்!

(1998)





# எரிந்து போன மனிதநேயம்...

ஓ!
பிந்துனுவெவக் கிராமத்தை
தொட்டுச் சென்ற
தென்றலே-நீ
தேயமெங்கும் போய்
உரத்த தொனியில்
ஓங்கி முழங்கு:
"அன்றைய இரவில்
எரிந்து போனவை
முகாம்கள் மட்டுமல்ல;
மனிதாபிமானத்தோடு
சித்தார்த்தரின்
'சிவுரை'யும்தான்"
என்று!

✵ ✵ ✵

மீண்டும் நீ சொல்:
“வெட்டுப்பட்டும் வெடிபட்டும்
துடிதுடித்து இறந்தனரே...
அவர்களும் ஒவ்வோர்
அன்னையின் புதல்வர்தாம்!
அவர்களும் இந்நாட்டில்
பிறந்திட்ட மனிதர்தாம்!
பட்டுப்போனவைகள் - அந்தப்
பசுந்தளிர்(கள்) மட்டுந்தானா?
இல்லை!
மகாமேகவனத்து - அகிம்சை
வெள்ளரசின் வேரும்தான்”
என்று!

❋ ❋ ❋

அன்னைதேசமே - நீ
உற்றுப்பாரிங்கே!
மரத்தால் விழுந்தவனை
‘டைனோசர்’ மிதிக்கிறது;
புண்பட்டவர்க்கெல்லாம்
விலங்குமாட்டி - ஒரு
வைத்தியம் நடக்கிறதே,
பைத்தியமா அவர்களுக்கு?

❋ ❋ ❋


அம்புபட்ட புறாவுக்காக
நீதிமன்றம் ஏகினானின்
போதம் நின்று நிலவுநாட்டில்
நீதிதேவி சிலையின் கைக்கு
விலங்குமாட்டி சிறையில் தள்ளும்
பேதமைக்கோர் எல்லையுண்டோ?

❋ ❋ ❋

இளைத்துவிட்ட
எறும்பென்றெண்ணி
ஈங்கு
இழைக்குமிந்த அநீதிக்கெல்லாம்
கிடைக்கும் நாளை
நல்ல தீர்ப்பு,
தருமத்தின் இறுதித்தீர்ப்பு!
அதன்பின்...
அடங்கியழிந்து போகுமிந்த
அதருமத்தின் ஆர்ப்பரிப்பு!

மித்திரன் (26.11.2000)





## ஓ! தந்தையே...

எங்கள் தந்தையே,
எங்கே இருக்கின்றீர்?
உங்கள் செல்வங்கள்
உதிரத்தை விழிவழியே
உகுப்பதனை நீங்களின்னும்
அறியாமல் உள்ளீரே!
கனவுகளில் கைகோத்து
களித்திருக்கும் பருவத்தில் - நிஜ
நினைவுகளின் கசப்பினிலே
நொறுங்கிப்போய் நிற்கின்றோம்
கற்பதற்கும் வழியின்றி
கஷ்டத்தில் நாமிருக்க
பொறுப்பின்றி இருப்பதற்கு
வெறுப்பென்ன எங்களிடம்?

மித்திரன் (12.12.1993)



## ஓ! வெண்புறாவே...

வெண்பட்டுத் துகிலுடைய
வெண்புறாவே நீ இன்று
கண்ணெட்டாத் தொலைவினிலே
கரந்துறையும் மாயமென்ன?

போரரக்கன் பிடியினிலே
பதறுதம்மா பாருலகம்
சீரான விழுமியங்கள்
சிதறித்தான் போனதம்மா!

எந்தையும் தாயவளும்
இணைந்தே சிரித்திட்ட
நந்தவனச் சோலைகளில்
நிறைந்தது மனுரத்தம்.

## 28. வீசுக புயலே!

பூக்களும் பிஞ்சுகளும்
பூத்திருந்த கனிமரங்கள்
வேரோடு சாய்க்கப்பட்ட
வேதனையைப் பாரம்மா!

பசுமையான புவனமின்று
பாலைவனம் ஆனதம்மா!
பண்புறையும் மானிடமே
புதையுண்டு போனதம்மா!

பிள்ளைகளை இழந்துவிட்டு
பரிதவிக்கும் அன்னையர்கள்...
உள்ளத்தால் உடம்புகளால்
ஊனமுற்ற மண்ணுயிர்கள்...

எல்லாப்பொருள்களுக்கும்
உயர்வான விலையிருக்க...
இல்லையோ மனிதனவன்
உயிர்க்கு மட்டும் நல்லவிலை?


மலிவான கடைச்சரக்காய்
மனிதாபிமானம்...மானம்...
பொலிவிழந்து தெருவிலின்று
போனதை நீ அறியாயோ?

புதர்ச்செடியின் அசைவிற்கும்
பாதியுயிர் போகுமிந்த
பதர்வாழ்க்கை எமைவிட்டும்
பொய்யென்று ஆகாதா?

என்றெமக்கு சமாதான
    இன்றென்றல் வீசிடுமோ!
உன்பயணம் முடித்துநீயும்
    அன்னை பூமி வருவாயோ?

புதுவசந்தச் சேதிகொண்டு
    புறா நீயும் வரும்வழியை
அதுவரையும் பார்த்திருப்போம்!
    அழுதுகொண்டே காத்திருப்போம்!

இளங்கதிர் - (1998)







## என் ஆத்மா பூக்களை நேசித்துக் கொண்டிருக்கிறது

தும்பியைப் பிடித்துக்கட்டி
தமாஷாய்ப்பட்டம் விட்டு...
திருட்டு மாங்காய்க்காய்
தோப்புவழி திரிந்த
பொழுதெல்லாம் - நான்
பூக்களை
நேசித்துக்கொண்டிருந்தேன்.

கித்துல் கருப்பட்டியோடு
அப்பம் உண்டுவிட்டு
காட்டுக்கு விறகுவெட்ட
காலையில் போன அப்பா
பாம்புக்குப் பலியாகி நான்
வீட்டுக்கு வருகையிலே
"அமரர்" ஆ(கி)யிருந்தார்.

சுளகு முடைந்து - தென்னங்
கீற்றுந்தான் முடைந்து
அம்மா உழைத்தபணம்
கால்வயிறும் நிரப்பவில்லை

இலவச உணவுக்காய்
"ஸ்கூல்" சென்றதுண்டு
எப்படியோ எட்டுவரை
ஒப்பேற்றி முடித்ததுண்டு
உண்ண உணவு இன்றி
உடுக்க நல்ல துணியுமின்றி
என்னதான் இடர்ப்படினும்
நான் - வண்ணப்
பூக்களை ஆழமாய்
நேசித்துக்கொண்டிருந்தேன்!

அம்மா அடம்பிடிக்க...
சோதரிகள் அழுதுநிற்க...
ஒன்றையும் பாராமல்
இங்கு வந்து சேர்ந்துவிட்டேன்.
வயிற்றுப் பாட்டுக்காய் - ராணுவ
வீரனாய் மாறிவிட்டேன்

பூக்களின் இதழ்வருடி
குயிலிசை ரசித்துக் கேட்கும்
கிராமத்தான் எனக்கு
ஏதேதோ பயிற்சி தந்து
பூவிதழ் வருடும் கையில்
துப்பாக்கியொன்றுந் தந்தார்
சட்டென்று உயிர்களினை
கொலை செய்யும் கருவியதை
சற்றேனும் பிடிக்கவில்லை;
அதைச் சுமக்கும் நாள் முதலாய்
என் கையே எனக்கு ஒரு
சுமையாகிப் போனதுவே!

நான்...பூக்களை
நேசித்துக்கொண்டிருந்தேன்;
துப்பாக்கித் தோட்டாவை
நேசிக்க முடியவில்லை.


அதோ...
கைப்பணி செய்வதற்காய்
பள்ளிச் சிறுவர் கையில்
பல வண்ணப் பூக்கள்!
வறுமை எனைவிட்டும்
வஞ்சகமாய்ப் பறித்திட்ட
இயல்பு வாழ்க்கையினை
எண்ணிப்பார்க்கையிலே
பெருமூச்சு சுடுகிறது!

கொலைக்கருவி என் கையில்
கனக்கின்ற இப்பொழுதும்
நான்...பூக்களைத்தான்
நேசித்துக்கொண்டிருக்கிறேன்!
ஆனால்...
சீருடைக்குள் சிறையிருக்கும்
எனக்குள் இன்னொருவன்
இருப்பதை யாரறிவார்?

தூரிகை பிடிக்கும் ஓர்
ஓவியனாவதற்கு - நான்
கண்டிருந்த கனவும் ஒரு
முகில் ஓவியமானதின்று!

என்றாலும்...நான்
என்றேனும் இறந்துபோனால்...
என் கல்லறை மருங்கில்
ஒரே ஒரு
பூச்செடி நட்டிடுங்கள்!
ஏனெனில்...
நானுயிர் நீத்தாலும்
என் ஆத்மா
பூக்களை
நேசித்துக்கொண்டிருக்கும்!

மித்திரன் (30.04.2000)



## நாமும் சமூகமும்

அடுத்தவர் வலிகளும்
எம்மவர் கண்ணீரும்
எமை இப்போதெல்லாம்
உசுப்புவதேயில்லை;
என்றிருந்து நாங்களெல்லாம்
இப்படி ஜடங்களானோம்?

பள்ளிக்கூடம் செல்லும்
பச்சிளம் பாலகரை
வீட்டுப்பணி ம(க்)களாய்
வேலை வாங்குகின்றோம்;
சிறுபிழைக்கும் மிருகங்களாய்
அடித்துதைத்து நொறுக்குகின்றோம்;
தடுப்பதற்கு எம்மிடையே
நாதியில்லை, சுரணையில்லை
எப்போதிருந்து நாங்கள்
இவ்விதம் உணர்விழந்தோம்.?

மணமகனை 'வாங்க'வென்று
பணப்புதையல் தேடுதற்கு
கடல் கடந்தும் எங்கள் பெண்கள்
பறந்து சென்று நாய்படாத
பாடுபட்டு உழைத்து வந்த
பணமெடுத்து மஹர்கொடுக்கும்
வெட்கமற்ற ஆடவராய்
மாறுதற்கு என்றிருந்து
இரத்தத்தில் நிறமிழந்தோம்?

(2003)



## பிரிந்து செல்லுகை

போதும்!
நான் நீயாகவும்
நீ நானாகவும்
உணர்தலில்
என் ஆன்மா
சிலுவைகள் சுமந்தது
இனிப்போதும்!

உனை நானாகக்
கற்பிதம் செய்கையில்...
என் இதயமே செவியாகி
உந்தன்
வலிகளை விசாரித்து
இமை ஒத்தடங்கள்
தந்து போனதை நீகூட
அறிந்ததில்லை.
ஏன்,
இந்த மௌனத் தவத்தில்
எனக்கு நானே
அந்நியமாகும் வரை
நான்கூட அதை
உணர்ந்திருக்கவில்லைதான்!

போதும்!
நீயாக நானும்
நானாக நீயும் உணர்ந்து...
சுயம்தொலைத்து...
சாத்தியமற்றதன் வெளிச்சத்தில்
விடியல் தேடியது
இனிப்போதும்!

எனவே...வா, வந்து
எடுத்துச் செல்
என்னிலிருந்து உன்னை.

இனியேனும்
நான் நானாகவே
உயிர்க்க விழைகிறேன்
(என்னிலிருந்தான)
அந்தப் பிரிந்து செல்லுகை
என்னுயிரினை(யும்)
ஈர்த்துப் போனாலும்
அக்கறையில்லை
அதற்கேனும் உதவிடு.
..................
உனது மௌனத்திலும்
அது...
அத்தனை கொடிதில்லை.

டிசம்பர் (2001)



## அட, அப்படியா?

சிரித்துப் பேசிவிட்டால்
சில்லறைகள் சிதறுமென்று
அஞ்சுகின்ற பேர்வழிகள்
சாவீடு செல்வதற்குத்
தோதான முகமுடையோர்
கார்களிலே பவனிவரும்
கோட்டணிந்த கனவான்கள்
கையெடுத்துக் கும்பிட்டு...
காதுவரை பல்லிளித்து...
குழைவாகப் பேசக்கண்டு
குழப்பமாய்ப் பார்த்திருந்தேன்
அடுத்த வீட்டு அம்பிப்பயல்
அம்புபோல் ஓடிவந்து
மூச்சிரைக்க நின்று சொன்னான்;
“அக்கோவ்! அடுத்தமாதம்
தேர்தல் வருகிறதாம்!”

மித்திரன் (19.10.1997)



## ஒரு துளிக்கண்ணீர்

உயர்ந்த மலைமேல்
உறைவிடமிருந்தும்
உரிமையும் உயர்வும்
தூரத்துக் கானலாய்...

புத்தகம் சுமக்கும்
பள்ளிப் பருவத்தில்
கவ்வாத்துக் கத்தியும்
கூடையும் சுமையாய்...

எட்டடி லயனில்
எங்கள் ராச்சியம்...
"இலக்ஷ்"னின் போதுமட்டும்
இருப்போம் ராசாக்களாய்!

உழைப்பையே வரமாய் - எம்
உடலையே உரமாய்க்
கொடுப்பவர் நாங்கள்
கர்ணனைப் போன்றோர்!

வெட்டவெட்டத் தேயிலை
துளிர்விடும் என்பதற்காய்
எங்கள் உரிமைகளை(யும்)
செடியென்றே கருதலாமோ?

நாட்டுப் பொருளாதாரத்தின்
நாடிநரம் பெமக்கு
அடையாள அட்டையின்றேல்
அங்கீகார மேயில்லை!

தினம் தினம் அவலங்கள்
தொடர்கின்ற எம்வாழ்வில்
இருள்நீங்கா தோவென்று
ஏங்கியேங்கியே தவிக்கும்

எமக்கென உளமுருகி
ஒருதுளிக் கண்ணீரை
வடிப்பது விடியலின்
பனித்துளி யொன்றே!

மித்திரன் (01.02.1998)



## இஸ்ரேலியனே!


புல்லென்று நினைத்தனையோ,
        "பூட்ஸ்" காலால் நீ மிதிக்க?
கல்லென்று கருதினையோ,
        காலமெல்லாம் நிலங்கிடக்க?
பொல்லாத சூழ்ச்சியினால்
        புனித பூமி அபகரித்த
புல்லியனே உனக்கெதற்குப்
        புறாக்களின் சின்னமினி?

வல்லமைகள் உண்டெனநீ
    வாய்ச்சவடால் அடித்த போதும்
கல்லெறியும் சிறார் முன்னே
    கால்தூசாய்ப் பறந்தனையே!

வில்லத்தனம் புரியுமுந்தன்
வீண்செயலை உலகறியும்
நில்லொருநாள் மீண்டு(ம்) வரும்
நீணிலமே திரண்டு எழும்!

அன்றைய நாள் உன் கொட்டம்
அடங்கிவிடும்; பார்த்திரு நீ!
வன்முறையின் வல்லரசுன்
வலியொடுங்கும்; காத்திரு நீ!
நன்றிகொன்ற உன்செயற்காய்
நனிவருந்தப் போகின்றாய்!
ஒன்றியெழும் பேரலைமுன்
ஒரு துரும்பாய் நீயாவாய்!

அல்-ஹஸனாத்: மார்ச் 2002





## அன்னைக்கொரு மடல்...

என்னுயிரானவளே,
'ஷெல்' ஒலித்தாலாட்டில்...
நுளம்புகளின் இன்னிசையில்...
ஏதேனுமொரு முகாமில்
உறக்கமின்றிப் புரளும்
தாயே,
நலமாக இருக்கிறாயா?

அம்மா,
இரு மாதங்கட்கு முன்
நீ எழுதியனுப்பிய
நிருபம்
நேற்றுக்கிடைத்தது;
கண்டவுடன்...
இதழில் புன்னகையும்
விழியில் கண்ணீரும்
ஒருங்கே அரும்பின.

அறிவாயா?
கடந்து வந்துவிட்ட
கசப்புக்களில்
உள்ளம்
அடிக்கடி லயித்து...
அழுகையில் ஆழ்ந்து...
தாளவே முடியாத
துன்பப்பொழுதுகளில்
அன்னை மடியென்று
உன்
மடல்களுக்குள்ளேயே
புதைந்து போகின்றேன்!

பழுப்புக்காகிதத்தில் - உன்
கிறுக்கல் எழுத்துத்தான்
என் கண்ணீரை
விழிகளுக்குள்ளேயே
நிறுத்தி வைக்கிறது;
கொஞ்சநேரமேனும்
நிச்சிந்தையாய் - எனை
துயிலச்செய்கிறது!

ஈன்றவளே,
பல்கலைக்கழகத்தில்
பட்டம்பெறவந்து
நான் - அதிக
உயரத்திலிருப்பதாய் - நீ
நினைத்து மகிழலாம்!
குறிஞ்சிக் குன்றின் மேல்
குபீரென ஒளிர்ந்தாலும்
என்றன்
கால்களுக்குக் கீழிருப்பது
நெருஞ்சிகளென்பதை
நீயறிய நியாயமில்லை.

அம்மா,
சிற்சில பொழுதுகளில்
சுயநலங்களும்
சந்தர்ப்பவாதங்களும்
சுழற்காற்றாகி - என்னை
சுழன்றடிப்பதுண்டு
அப்பொழுதெல்லாம்
அலைகடல் துரும்பென
ஆவலாய்ப் பற்றுவது
உன்றன்
உயரிய அறிவுரைகள்
ஊட்டிய உரத்தின்
வேரைத்தான்!

பலத்த சிரிப்பொலிக்குள்
என்
நொந்த இருதயத்தின்
முனகல் சத்தம்
பிச்சைக்காரனின்
பசித்த வயிறாய்
உரத்துக் கத்துகிறது!

கத்தும் சத்தம் மட்டும்
“பர்தா” அணிந்த
முஸ்லிம் பெண்ணாய்
மறைவாக...மறைவாக!
விழியசைவிலேயே
துயர்தீர்ப்பவள் நீயோ
தொடுவானமாய்
தொலைவாக...தொலைவாக!

என்றாலும்...
நீ ஏற்றிய
இலட்சிய தீபம் மட்டும்

தாயின் கனவினை
உயிர்ப்பிக்கும் உறுதியோடு
உறைந்திருக்கின்றது!

எனவே...
இந்த மில்லேனியத்தில்
எமக்கும் விடியலுண்டு
நம்பிக்கை இழக்காதே!
அந்த நன்னாளில்...
சோதனைச்சாவடிகள்
விலாசம்தொலைத்திருக்கும்!

அடையாள அட்டையின்றி
எங்கும் உலாவலாம்!
அகதிமுகாம்விட்டு
இல்லம் திரும்பலாம்

உரிய நேரத்திலுன்மடல்
எனக்கு எட்டும்!
மனிதரென்ற அங்கீகாரம்
எங்களுக்கும் கிடைக்கும்!


மித்திரன் (12.03.2000)



## மாற்றம்

சீதனச் சிவதனுசை
வளைத்துடைக்கும்
இராமர்கள்
புலம்பெயர்ந்து
புதுப்பணக்காரராய்!
சீதாக்கள் இங்கு
இராவணர்களுக்கு
சின்னவீடுகளாய்!

மித்திரன்



## புரிதல்

நீ
காற்றில் எழுதிய
வாக்குறுதிகள்
கடிதங்களான பொழுது...
நான்
விழிகளைத் தொலைத்திருந்தேன்.

நீ
கணையுடைத்துக் கரம்பற்ற
வருவதற்கிடையில்...
என் இதயம்
இன்னொரு ஹிரோஷிமாவாய்
உருக்குலைந்து போயிற்று!

எனக்குத் தெரிகிறது...
சாத்திய வரைகோட்டின்
எல்லை தாண்டிய
ஏதோ ஒரு புள்ளியில்
உன்னுடனான
எனது கனவுகள்!

பூக்கள் உதிர்ந்து...
முட்கள் மட்டுமே எஞ்சிய சோலையில்
குயில் கூவ மறந்தது;
புள்ளினம் பறந்தது;
இனிவராத வசந்தத்துக்கு
முகாரி பாட தென்றல்
ஒத்திகை பார்த்தது!

மோனத் தவத்துள்
"பவித்திரம் பேணும்"
உனக்கு - இந்த
உணர்வுகளின் சமாதிபற்றிய
புரிதல் இருந்திருந்தால்...
உள்ளார்ந்த
உயிர்ப்பு வேட்கையேனும்
கொஞ்சம்...
அர்த்தப்பட்டிருக்கும்!

(2000)



## வர்ணனைகளுக்கு அப்பால்...


உன்னுடன் வாழ்வு
பிணைக்கப்பட்ட போதே - என்
பெயரை... சுயத்தை...
தொலைத்துவிட்டேன்.


பின்தூங்கி முன்னெழுதல்
பூமியாய்ப் பொறுமைபேணல்
இன்னும்-
முடிவிலாப் பல பணிகள்
எழுதாத விதியாயின.

நீ-
வேண்டும் போதெல்லாம் - உனது
உணர்வுந்தலின்
வடிகாலானேன்;
உன்னில் பாதி நானென
நம்பினேன்!

அந்தோ!
எந்தன்-
உணர்வுகள்
கிளர்ந்தெழும் பொழுதுகளில்
நீ-
மரமானாய்;
எனது நிசிக்களில்
நிலா சூரியனானான் ;
என்னுடைய விடியல்களில்
பூச்செடிகள்தோறும்
முட்களே மலர்ந்தன...
நான்-
வர்ணனைகளுக்கு அப்பால்
முகமிழந்து 'வெறும்' மனுஷியாய்...!

(2002)





## காற்றின் குரல்

என்
பலஸ்தீனத் தோழனே,
உன் பாதச் சுவடுகளை
புழுதிப் புயல்கள்
அழித்துப் போயின;
நீ சிந்திவிட்டுப்போன
குருதித் துளிகளை
நேற்றிரவு பெய்தமழை
கழுவிச் சென்றது.

ஆனால்...
காற்று மட்டும் - உன்
ஈமானிய வேட்கையின்
உயிர்ப்பினை உள்வாங்கி


எழுச்சி நோக்கிய
இதய சங்கற்பத்தை
வனங்கள் தோறும்...
நகர்கள் தோறும்...
கடல்கள் கடந்தும்...
ஏந்திச் செல்கின்றது;


மலை முகடுகளில்
மோதிமோதி
எதிரொலி எழுப்புகிறது!

“என் தாயகம் மீட்கப்படும்
ஒலிவமரக் கிளைகளோடு
இஸ்லாத்தின் கொடி - அங்கு
சுயாதீனமாய் அசைந்தாடும்!”

காற்றுக்குள் உன்குரல்
மீண்டு(ம்) மீண்டு ஒலிக்கிறது.
அக்காற்றின் குரலோடு ஒன்றித்தாய்
உனக்கான - எந்தன்
மௌனப் பிரார்த்தனை
வியாபித்து எழுகிறது!

(2003)





## விடியல் வருவதெப்போ?

தங்கக் கூண்டினிலே
தங்கி இருப்பதனால்
தத்தையின் சித்தமென்றும்
தித்தித்திடுவதில்லை!

சிட்டுக்குருவியல்ல - நான்
சுயாதீனமாய்ப் பறக்க;
சிறகே இரவல் இங்கே - இனி
சுதந்திரம் தானெங்கே?

பால்வண்ண மென்சிறகில்
போரின் தாண்டவத்தால்
செந்நிறம் படியுமென்றா
சிறையிட்டனரென்னை?


நாளையென் சிறைவாழ்வு
நிறைவெய்தப் போகுதென்று
அறிக்கைக் 'கமிஷன்' தனில்
அறிவித்திருக்கக் கண்டேன்!

நாட்கள் வந்து வந்து
நகர்ந்தே சென்றிடினும்
'நாளை' என்றொருநாள்
அவர்கட்கு வரவேயில்லை!

சமாதானச் சின்னமென்று
தேர்ந்தெடுத்து எனைவதைக்க
மானிடப் பிறவிகட்கு
யான் செய்த அநீதியென்?

என்சிறகை... என்னுணர்வை...
என்வாழ்வைச் சிதைக்குமிந்த
சோகவாழ்வில் விடியலெப்போ;
சிறையிலேயே சமாதியாமோ?


(அமரர் வரப்பிரகாஷ் நினைவு
தினக் கவிதைப்போட்டியில் பரிசு
பெற்ற கவிதை - 2000/2001)



## துப்பாக்கி கீதம்

"யுத்தமும் ரத்தமும்
யுகங்கள் தோறும்
இத்தரை எங்கும்
இருந்தே வருமா?"
கேட்ட புறாவிடம்
துப்பாக்கி சொன்னது:
"நான் என்ற மமதை
எனக்கென்ற சுயநலம்
என்று மனிதனை
விட்டு நீங்குமோ,
அன்று உன் குரல்
அவனியில் ஒலிக்கும்!
அதுவரை கேட்குமென்
துப்பாக்கி கீதம்!"


மித்திரன (01.02.1998)



## சுதந்திரப் பொன்விழா

என் அன்னை
பொன்விழா
காண்கிறாள்;
சுதந்திரத்திற்காகவாம்!
வெண்புறா மட்டும்
இன்னுமே
இரும்புக் கம்பிகளுக்குள்!

மித்திரன் (01.02.1998)



## முன்னேற்றம் (?!)

விண்வெளி வரைகூட
விரைகிறது மனிதகுலம்!
மண்ணுலகில் மட்டுமின்று
மனிதம் மரணித்து...
உறவுகள் போலியாகி...
அன்புக்கு விலைபேசி...
உண்மைக்குக் குழிதோண்டி...
உணர்வுகளில் சாயமிட்டு...
அடடா! உலகம் ரொம்ப
முன்னேற்றம் அடைந்துளது.

மித்திரன் (10.08.1997)



## நான் பெண்

நான் பெண்
என் சின்னஞ்சிறு உலகம்
எப்போதும் இருட்டுக்குள்!

என் இரவுகள்
நிலவோடு நட்சத்திரங்களை
தொலைத்துவிட்டன;
எனது பகல்கள்
ஆதவனையும் தென்றலையும்
இழந்துவிட்டன.

அன்று...
சீருடை மிருகங்களால்
துகில் உருவப்பட்டு...
பருத்த முலைகளும்
தொப்புளுந் தொடைகளுமாய்
அவயவங்கள் - பலர்முன்
ஏலம்விடப்பட்டு...

சிறைக்கம்பிகளின் பின்னால்
மாறிமாறிக் குதறப்படுகையில்
பெண்மையின் ஆத்மா
உரத்துக் கதறிய குரல்
எவருக்கும் கேட்கவில்லை.

அன்பையும் பரிவையும்
யாசிக்கும் போதெல்லாம்
புறக்கணிப்புக்கள் பல்லிளித்தன.
கருணை விழைந்து
கரம் நீளும் போதெல்லாம்
அவர்கள்...
சிங்கப்பல்தெரியச் சிரித்தார்கள்!

நான் பெண்
கீற்று நிலவொளியில்...
காணாமல் போன 'என்னை'
கூடவே, என் விடியலை...
தேடித் தேடித் தனியாக...!
சகதி நிறைந்த அப்பாதை
விரைந்து நடக்கமுடியாமல்
பெண்களை உயிருடன்
புதைத்த குழிகளுடன்
கற்களும் முட்களும் நிறைந்து...!
கண்ணுக்குத் தெரியாத
விலங்குகள் பிணித்த கால்கள்
தள்ளாடித் தடுமாற...
விடியலைத் தேடி
நான் - மெல்ல நடக்கிறேன்.

பெண்ணின் குரல் - டிசம்பர் (2000)



## வழக்குரை மன்றம்

"கோவலன் கொலையுண்டான்"
செய்தி வந்ததும்
காற்று மௌனித்து
அஞ்சலி செலுத்தியது.

➢➢➢

இரவுக்கு வெள்ளையடிக்க
நிலவு பொழிந்தாலும்
தேச இருட்டு அஞ்சி
காரை பெயர்ந்த குடிலுள்
கந்தல் சாக்கிலே - அவள்
சுருண்டிருந்தாள்;
கண்முன் கணவனின்
சடலமிருந்தும்...
அடையாளங்காட்டி
அழமுடியாது உணர்வுபுதைத்த
நேற்றைய அவலத்தில்
நொறுங்கியிருந்தாள்.

➢➢➢

கண்ணகிக்கு
கண்கள் சிவந்தன;
கூந்தல் அவிழ்ந்து
காற்றில் அலைந்தது;
முகத்தில் ரௌத்திரம்
தாண்டவம் புரிந்தது.

➢➢➢

எட்டு மணிக்குள்
ஊர் அடங்கிற்று - நீண்டு
ஒலித்தது நாய்களின் ஓலம்
ஒன்பது மணிக்கு - கதவு
தட்டப்பட்டது;
திறக்குமுன்பே தாழ்
தெறித்து விழுந்தது;
உதைத்த உதையில்
கதவு கழன்றது.

“திடீர் சோதனை - தமிழ்ப்
பெண்களின் மீதுதான்
ஐயம் (?!)” என்றனர்.
வேதனை விழுங்கி
வண்டியிலேறிட - அங்கே
இன்னும் இவள்போல்
இளைய புறாக்கள்!

➢➢➢

எரிதழல் எழுந்து
இரு விழியாகிட
முகத்தினில் செந்தீ
மேவி விளங்கிட
வீண்பழி பொறுக்காது - கண்ணகி
வீறு கொண்டெழுந்தாள்.

➢➢➢

சேலைத் தலைப்பினை
   ஒருவன் இழுத்தான் ;
கத்திய வாயை
   மற்றவன் பொத்தினான் ;
கட்டிக் காத்த
   "எல்லாம்" அந்த
ஓடும் வண்டியில்
   உருக்குலைந்தாயிற்று!
வதை முகாம்களில்
   விசாரணைப் போர்வையில்
உயரதிகாரிகள்
   மீண்டும்ஒருமுறை
மிருகமானார்கள்!

➢➢➢


கண்ணகி கொங்கையைக்
   கழற்றியெறிந்தாள் ;
பற்றியெரிந்தது மதுரை!

➢➢➢

வழக்குரை மன்றில் வனிதை!
   வார்த்தையால் மறுபடி
வல்லுறவு நடந்தது.

ஆனால்...அன்றுபோல்
   எரிப்பதற்கிங்கென்ன
எஞ்சியிருக்கிறது,
   ஏலவே "எல்லாமே"
கருகிவிட்ட நாட்டில்?

இளங்கதிர் (2000/2001)



# வீசுக புயலே!

அவர்கள்
என் விழிகளின் ஒளியை
அபகரித்த பொழுதிலும்
நரம்பிடைக் குருதியை
உறிஞ்சிய போழ்திலும் - நான்
மௌனித்திருந்தேன்.


பரம்பரை வீட்டின்
கூரை கழற்றிச் சுவர்கள் சிதைத்து
தோட்டத்தில் படர்ந்த
திராட்சைக் கொடிகளை
ஜைத்தூன் மரங்களை
அறுத்தனர், தறித்தனர்;
பொறுத்தேயிருந்தேன்.

அமைதியின் பெயரால் - ஈன
அடக்குமுறைகளை - நிதம்
கட்டவிழ்த்த போதிலும் நான்தலை
கவிழ்ந்தே இருந்தேன்.

என்றாலும் இனி...
மௌனத்தை மௌனித்தும்
பொறுமையைப் பொறுத்தும்
இருக்குமாறு நான் பணித்துவிட்டேன்.
கவிழ்ந்த சிரசினை
சிலிர்த்து நிமிர்த்தினேன்!

தாயே! பலஸ்தீனே!
விழியின் ஒளியிலும்
நரம்பிடைக் குருதியினும்
ஐசுவரியங்கள் அனைத்திலும் மேலாய்
நீயே எனது
காதலுக்குரியவள்;
நீதான் உயிர்க்கு
மிக உவப்பானவள்!
உன்னை அரக்கர்கள்
அழிக்கின்றவேளையில்
வாளாவிருந்திடல் இனிமுடியாது!

என்னுள் உறையும்
சீற்றமே எழுக!
என்மண் மீதான
காதலே பெருகுக!
காதலும் சீற்றமும்
கலந்தே வெறியரை
துவம்சம் செய்திடும்
புயலென மாறுக!
இனியென் மண்ணில்
வீசுக புயலே!
விடுதலை பிறந்திட
வீசுக புயலே!



ஈழத்துத் தமிழ்க் கவிதைத் துறையில் பெண் கவிஞர்களின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாக விளங்குகிறது. எண்பதுகளுக்குப் பின் ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதைகளில் சமூக விமர்சனமும், பெண்ணிய நோக்கும், ஆழமான மன உணர்வு வெளிப்பாடுகளும், கவிதா ஆற்றலும் தென்படுகின்றன. ஊர்வசி, ஒளவை, மைத்ரேயி, சிவரமணி, சன்மார்க்கா, அ. சங்கரி, மதுரா ஏ. மஜீட், சுல்பிகா, கலா உட்படப் பலரின் கவிதைகளில் புதுமை நோக்கும், தர்மாவேசமும், புதிய வீச்சும் இடம்பெறுகின்றன. இந்த வரிசையில் புதிதாகச் சேரக்கூடிய பக்குவத்தையும், பலத்தையும் கொண்டவராக எனது மாணவியும், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை விரிவுரையாளருமான லறீனா அப்துல் ஹக்கும் இடம்பெறுவார் என்பதை, 'வீசுக புயலே!' என்ற இக்கவிதைத் தொகுதி உணர்த்துகிறது. எழுத்து, பேச்சு, நடிப்பு, இசை, ஓவியம் ஆகிய துறைகளில் தமது ஆற்றலை வளர்த்து வந்துள்ள லறீனா, இத்தொகுதி மூலம் தரமான ஒரு கவிஞராகத் தம்மை இனங்காட்டிக் கொள்கின்றார்.

கலாநிதி துரை. மனோகரன்

ISBN: 955-98241-0-4

விலை: 80/=